பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 18 செவ்வாய்க்கிழமை 02.07.2024 கதிர் 237

# கடன் மறுசீரமைப்பு விவாதத்தை எதிர்ப்பவர்கள் தேசத்துரோகிகள்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன

நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படுவதை யாராவது எதிர்த்தால் அவர்கள் தேச துரோகிகளாக வரலாற்றில் பதியப் படுவார்கள் என்று அமைச்சர் பந்துலகுணவர்த்தனதெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாட்டுக்கடன்மறுசீரமைப்பு தொடர்பான விசேட விவாதம் ஜீலை 02 மற்றும் 03 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. கடந்த காலங்களில்திறைசேரியில்டொலர் கையிருப்பு இருக்கவில்லை. நாடு கடனை திருப்பிச் செலுத்த முடியவில்லை. எரிபொருள் ☞ 2




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் காலமானதையடுத்து நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட வெற்றிடத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சண்முகம் குகதாசன் நிரப்பவுள்ளார்.

குகதாஸன் சம்பந்தனால் தற்போதைய அரசியலுக்கு அழைத்து வரப்பட்டவர். தமிழ் அரசுக் கட்சியின் புலம்பெயர் செயற்பாட்டாளராக இருந்த அவரை திருகோணமலைக்கு அழைத்து நேரடி அரசியலில் ஈடுபடுத்தியவர் சம்பந்தர்தான். அத்தோடு திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்களில் சம்பந்தருக்கு அடுத்து விருப்பு வாக்குகளைப் (16,770) பெற்றவரும் அவர்தான். அந்த வகையில் அடுத்த நாடாளுமன்ற உறுப்பினராவதற்குப் பொருத்தமானவர்.

இருந்தாலும் கடைசிக்காலங்களில் சம்பந்தருடனான குதாசனின் உறவுகள் மகிழ்ச்சிகரமானதாக இல்லை என்கிற அரசியல் விமர்சனங்கள் உண்டு. இந்தத் தனது நாடாளுமன்றப் பதவிக் காலத்தை அரைவாசியில் குகதாசனிடம் ஒப்படைப்பதாகக் காணப்பட்ட இணக்கத்தை சம்பந்தர் நடைமுறைப்படுத்தவில்லை என்பதால் ஏற்பட்ட பிணக்கு அது என்றும் கட்சிக்குள் பேச்சுண்டு. கட்சியின் வரலாற்றில் முதல் தடவையாக நடந்த தேர்தலின் போது கூட திருகோணமலை மாவட்டக் கிளையின் பிரதிநிதிகள் தொடர்பில் சம்பந்தனுக்கு கரிசனைகள் இருந்து, அவற்றை அவர் கட்சியின் மத்திய ☞ 2

## திறைசேரி உண்டியல்கள் நாளை விற்பனையாகும்

### மத்திய வங்கி அறிவிப்பு

திறைசேரி உண்டியல்களை எதிர்வரும் ஜீலை 03 இல், ஏலவிற்பனை செய்யவுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அந்தவகையில் மேற்படி திகதியில் 190,000மில்லியன்ரூபா பெறுமதியானதிறைசேரி உண்டியல்கள், ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக்கொண்டுள்ள 50,000மில்லியன்ரூபா பெறுமதியானதிறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 90 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி ☞ 2

## சம்பந்தனுக்கு இன்று கொழும்பில் அஞ்சலி

### நாளை நாடாளுமன்றிலும் நிகழ்வு

மறைந்தபெருந்தலைவர் சம்பந்தனின் பூதவுடன் இன்றையதினம் கொழும்பு ஏ.எப்.ரேமண்ட் மலர்சாலையில் காலை ஒன்பது மணி முதல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

அதேநேரம், மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவருமான ஆர்.சம்பந்தனின் பூதவுடல் நாளை புதன்கிழமை நாடாளுமன்ற வளாக முன் மண்டபத்தில் பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இறுதி மரியாதைக்காக வைக்கப்படுமென நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற விவகாரக் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் பங்கேற்புடன் இக்குழுக் கூட்டம் நடைபெற்றது. மறைந்த ஆர்.சம்பந்தனின் இறுதிக் கிரியைகள் திருகோணமலையில் ☞ 2

## பஸ் கட்டணங்கள் இன்று குறையும்

பஸ்கட்டணம் நேற்றுநள்ளிரவுமுதல் 5.07 வீதத்தால் குறைக்கப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய கட்டணத்திற்கமைய குறைந்தபட்ச பஸ் கட்டணம் 28 ரூபாவாகும். 2002ஆம் ஆண்டின் அமைச்சரவைபத்திரத்திற்கு அமைவாக தனியார் பஸ் சங்கங்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் கீழ் ஜீலை மாதம் முதலாம் திகதி பஸ் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### கடலில் மிதந்த திரவத்தை அருந்தியோரின்

## இறப்பு எண்ணிக்கை ஐந்தாக அதிகரிப்பு

கடலில்மிதந்துவந்த போத்தல் ஒன்றிலிருந்த திரவத்தை மதுபானம் என்ற எண்ணத்தில் அருந்திய 05 மீனவர்கள், உயிரிழந்துள்ளதாக கடற்படையின் ஊடகப் பணிப்பாளர் கப்டன் கயான் விக்கிரமசூரிய தெரிவித்தார். இந்த திரவத்தை அருந்திய மற்றுமொரு மீனவர் கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவரை மீட்டுகரைக்கு அழைத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

திரவத்தை ☞ 2

## இந்திய மீனவர்கள் 24 பேர் எல்லை தாண்டியதால் கைது

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்த இந்திய மீனவர்கள் 25பேர் வடக்கு கடற்பிராந்தியத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது மீனவர்களின் 4 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர், கெப்டன் கயான் விக்ரமசூரியதெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை காங்கேசன்துறைக்கு அழைத்து வந்து விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுவருவதாகவும் ☞ 2

## விவசாயத்துறையில் ரணிலின் இலக்கையடைய 6 போகங்கள்

### அமைச்சின் செயலாளர் ஜானக தெரிவிப்பு

தற்பொழுதுகிடைத்து வரும் நெல் அறுவடையின் அளவை எதிர்வரும் ஆறு போகங்களில் இரட்டிப்பாக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கியுள்ள இலக்கை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி தெரிவித்தார்.

இரண்டுவருட ☞ 8

## கடன் மறுசீரமைப்பு உடன்பாட்டை உடனே ஒத்திவைத்தாக வேண்டும்

### லக்ஸ்மன் கிரியெல்ல வலியுறுத்து

வெளிநாட்டு படு கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையை பாராளுமன்றத்துககு சமர்ப்பிப்பதை ஒத்தி வைக்க வேண்டுமென எதிர்க்கட்சிபிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்தியுள்ளார்.

ஆளும் தரப்பு நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்க இருக்கும் வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைஅறிக்கை தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் ☞ 8

## ஹிருணிக்காவின் பிணைமனு மீது ஜீலை 4இல் விசாரணை

தனக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள மூன்று வருட கால கடுழியச் சிறைத் தண்டனையை நீக்கி தன்னை விடுவிக்குமாறு கோரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுதாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில், சிறைத்தண்டனையை நீக்குமாறு கோரி நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுதாக்கல் செய்யப்பட்டுள் ☞ 2

## நாடாளுமன்ற அமர்வு இன்று ஒரு நாள் மட்டும்

நாடாளுமன்றம் இன்றுகூடவுள்ளது. கடன் மறுசீரமைப்புதொடர்பில் ஜனாதிபதி விசேட அறிக்கையொன்றை வெளியிடவுள்ள நிலையில், நாளை நாடாளுமன்றம் கூடாதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் இன்றும் நாளையும் கூடும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த ☞ 2

## தேர்தல்கள் ஆணையாளருடன் நேற்று மக்கள் போராட்ட முன்னணி சந்திப்பு

### ஒத்திவைப்புச் சதிகள் குறித்து ஆராயப்பட்டது

தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கான ஆளும் தரப்பின் சதிமுயற்சிகள் குறித்து மக்கள் போராட்ட முன்னணி தேர்தல் ஆணையத்திற்கு சென்று தேர்தல் ஆணையாளருடன் பேச்சு நடத்தியது.

குறித்த சந்திப்பு தொடர்பில் சமூக அரசியல் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந் தெரிவிக்கையில்,

மக்கள் போராட்ட முன்னணியை ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

குழுவிலும்வெளிப்படுத்தியிருந்தார். அதனால் மத்திய குழுக் கூட்டத்தில் இறுதி நேரத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள், திருகோணமலையில் கட்சி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில்கூட முக்கியபேசுபொருளாக இருந்தது.

கடைசியில்தனதுவாக்குறுதியை முற்றிலுமாக மீறிவிடாத வகையில் குகதாசனுக்கு வழிவிட்டுவிட்டார் சம்பந்தன். இனி திருகோணமலை மாவட்டத்திற்கு சம்பந்தனால் ஆற்றமுடியாமல் போய்விட்டதாகக் குறைகூறப்பட்ட எல்லாவற்றையும் புதிய நாடாளுமன்ற உறுப்பினரால் ஆற்றிவிட முடிகிறதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். அரசியல்விமர்சனங்களும்அரசியல் செயற்பாடும் வேறுவேறானவை அல்லவா?

...............................

இன்றும் நாளையும் நாடாளுமன்றத்தில் நடக்க இருந்த கடன் மறுசீரமைப்புத் தொடர்பான விவாதம் இன்று மட்டுமாக என்று மட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. நாளை நாடாளுமன்றத்தில் மறைந்த சம்பந்தனுக்கு அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது. தமிழ்த் தலைவர் ஒருவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நாடாளுமன்ற அமர்வுகளைஒத்திவைக்குமளவுக்கு சிங்களத் தலைவர்கள் நல்லவர்களாகிவிட்டார்களான என்று பயந்துபோய்விசாரித்தால், காரணம் அது இல்லை என்கிறார்கள்.

நாடாளுமன்றத்தின் வழமையான அமர்வு ஜூலை 9 தான் நடக்க இருந்தது. அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே ஜூலை 2 இந்த அமர்வை ஆளும் தரப்புத்தான் கூட்டியது. அதுவும் பிரதமரின் அழைப்பின் பேரில்தான் நாடாளுமன்றம்கூட்டப்பட்டது. கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் குறித்து நாட்டுக்குவிளக்கவும்விவாதிக்கவும் என்றுதான்இந்ததனிக்கூட்டத்திற்கே அழைப்பு அனுப்பப்பட்டது. ஆனால் கடன்மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் என்ன இருக்கின்றது என்பது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்னமும்தெரிவிக்கப்படவில்லை. ஒப்பந்தத்தின் பிரதிகள் வழங்கப்படவில்லை. குறிப்பாக விவாத்தை நடத்த வேண்டிய எதிரக் கட்சி உறுப்பினர்களுக்கு அவையெவையும் வழங்கப்படவில்லை.

என்னவென்றே தெரியாத ஒரு விடயத்தில் என்ன விவாதம் நடத்துவதுஎன்றுகட்சித்தலைவர்கள் கூட்டத்தில்எதிர்க்கட்சிகள்எகிறியதை அடுத்தே நாடாளுமன்றக் கூட்டம் இன்றுடன் மட்டுப்படுத்தப்பட்டது. கடன்மறுசீரமைப்புப் பற்றி அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு விளக்கவுரை ஆற்றுவதுடன் இந்தத் தனி அமர்வு முடிவுறும்.

ஆளும் தரப்பு கடன்மறுசீரமைப்புத் தொடர்பில் பாரிஸ்கிளப்புடன்இணக்கத்தையும் சீனாவுடன் ஒப்பந்தத்தையும் செய்து கொண்டதாக அறிவித்தது. பாரிஸ் கிளப்புடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி அதில் அங்கம் வகிக்கும் இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுடன் இன்னமும் நேரடி ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகதால்தான் தம்மால் பிரதிகளைத் தரமுடியவில்லை என்று ஆளும் தரப்பில் விளக்கம் சொல்லப்படுகின்றனவாம்.

ஜூலை9க்குமுன்னராவதுஅந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகுமா, பிரதிகள் கைகளுக்குக் கிடைக்குமா அல்லது சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் சில பல பகுதிகளைத் தவிர்த்துவிட்டு நாடாளுமன்றத்தில் பேருக்கு ஒரு விவாதம் நடத்தியது போன்றுதான் இதிலும்பிரச்சினைக்குரியபகுதிகளை மறைக்கநாடகமாடப்படுகிறதாஎன்று நகைக்கிறார்கள் எதிர்க் கட்சியினர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் எரிவாயுக்கான வரிசைகள் உருவாகின. சமூகம் முழுமையாக வெறுப்புக் கலந்த சமூகமாக மாறி, நாடு முழுவதும் போராட்டங்கள் ஏற்பட்டன.

நாட்டைப் பொறுப்பேற்க எவரும் முன்வராத வேளையில், பிரதமராகவும், முதிர்ந்த அரசியல் வாதியாகவும் அனுபவம் வாய்ந்த ரணில்விக்ரமசிங்கஅந்தச்சவாலை ஏற்று நாட்டை ஸ்திரப்படுத்தும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார். அவர் செய்த முதல் விடயம், சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று நீடிக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்தைஏற்படுத்தியது. அதனை வெற்றியடையச் செய்ய பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்.

அத்துடன், ஒரு நாடு என்ற வகையில் இதற்கு முன்னர் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்றிருந்ததால், இம்முறை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனிப்பட்ட முறையில் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் கடுமையான முயற்சிகளில் ஈடுபட வேண்டியிருந்தது. இதன் விளைவாக, 2027 ஆம் ஆண்டு வரைசர்வதேசநாணயநிதியத்துடன் நீடிக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்திற்குச் செல்ல முடிந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒப்பந்தத்தின் பின்னரே, நம் நாடு சுவாசிக்கத் தொடங்கியது எனலாம்.

அனைத்து விடயங்களிலும் தன்னிறைவுஅடையாதநாடாகநாம் கண்டிப்பாகவெளிநாடுகளில்இருந்து பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும். அரசியல் ரீதியில் யார் தலைவராக இருந்தாலும் சர்வதேச அங்கீகாரம் கிடைக்காத பட்சத்தில் கொடுக்கல் வாங்கல்களைப் பேண முடியாது. இத்தகைய பரிவர்த்தனைகள் உலக விதிகளின்படி மட்டுமே நடக்க வேண்டும். நீடிக்கப்பட்ட கடன் வசதி ஒப்பந்தத்தின்படி, 2027 ஆம் ஆண்டு வரை கடன் ஒப்பந்தத்தில் ஈடுபட முடிந்துள்ளது. எனவே நாங்கள் வருடந்தோறும் பொருட்களை இறக்குமதி செய்ய முடியும்.

இன்னும் சில மாதங்களில், 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட உள்ளது. வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டால்தான் அரச ஊழியர்களின் சம்பளம், சிரேஷ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதியம், சமுர்த்தி, அஸ்வெசும என்பன ஏழைகளுக்கு வழங்கப்படும். மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு இல்லாமல், வரவுசெலவுத்திட்டத்தை 2027 வரை தயாரிக்க முடியாது என்றார்.

சர்வதேச நாணய நிதியம் 2025 வரவு செலவுத் திட்டத்திற்காக 700 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும். உலக வங்கி 400 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வரவுசெலவுத் திட்டத்திற்காக வழங்குகிறது. வரவு செலவுத் திட்ட ஆவணம் தயாரிக்கும் போது மேலும் 3655 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் நிவாரணமாக கிடைக்கும் என நம்பப்படுகிறது. அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் இவ்வாறுதான் தயாரிக்கப்பட வேண்டும். யார் ஆட்சி செய்தாலும் அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், நிவாரணங்கள் போன்றவற்றுக்கு பணம் கண்டிப்பாகத் தேவை. இந்த முறையைத் தவிர, வரவுசெலவுத் திட்டத்திற்கான பணத்தைப் பெற வேறு வழியில்லை.

இந்த கடன் நிவாரணம் என்பது கணிப்புகள் மாத்திரமே. இந்த முன்னறிவிப்பு 2027 ஆம் ஆண்டுக்கும்தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் உதாரணமாக, 2027 ஆம் ஆண்டுக்குள், வரவுசெலவுத் திட்டத்தில் பாரிய பற்றாக்குறை ஏற்படாவிட்டாலும், 3911 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பற்றாக்குறை ஏற்படும்என்றுகணிக்கப்பட்டுள்ளது.

அதன்போது, நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் 629 அமெரிக்க டொலர்களும், சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 600 மில்லியன் அமெரிக்க டொலர்களும், உலக வங்கியிடமிருந்து 300 மில்லியன் அமெரிக்க டொலர்களும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 300 மில்லியன்அமெரிக்கடொலர்களும் வரவு செலவுத் திட்ட ஆவணத்தைத் தயாரிக்க வழங்கப்பட உள்ளது. 2027 வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரிப்பதற்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பற்றாக்குறை ஏற்படும். அந்தப் பற்றாக்குறையை ஈடுகட்ட சர்வதேச சந்தைக்குச் செல்ல வேண்டும்.

தற்பொழுது யார் ஆட்சியில் இருந்தாலும், இலங்கையின் பிணைமுறிப் பத்திரங்களை உலகில்யாரும்வாங்க மாட்டார்கள். 2027 இல் தான் பிணைமுறிப் பத்திரங்களை வெளியிட முடியும். இந்த வகையில், 2027 ஆம் ஆண்டுக்குள் நமது நாட்டில் 14 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நியக் கையிருப்பு இருந்தால் மட்டுமே பிணைமுறிப் பத்திரங்கள் வெளியிட முடியும். தற்போது, 5.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே கையிருப்பில் உள்ளது.

எவ்வாறாயினும், ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு முறையான திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். இவ்வாறானதொரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தும் அதேவேளை, ஜனாதிபதி வெளிநாடுகளுடன் உடன்படிக்கைகளைமேற்கொண்டு வருகின்றார். இதில் எந்தவொரு ஒப்பந்தமும் வேலைத்திட்டமும் மறைக்கப்பட்டதல்ல. ஜனாதிபதிசகல தகவல்களையும்பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

அந்தப் பின்னணியில், இந்த உருவாக்கப்பட்ட பொருளாதாரத் திட்டத்தைத் தவிர்த்து எவராலும் அரசாங்கத்தை நடத்த முடியாது. இந்தப் பொருளாதாரத் திட்டத்திற்குப் புறம்பாக யாராவது ஆட்சி செய்ய வேண்டும் என்று கனவு கண்டால், நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதைத் தடுக்க முடியாது என்பதைக் கூற வேண்டும்.

எனவே இந்த நாட்டை நேசிக்கும், எதிர்கால சந்ததிகளுக்காக ஒரு தேசமாக முன்னேறிய மற்றும் அபிவிருத்தி அடைந்த நாட்டில் வாழக்கூடிய சூழலை உருவாக்குவதற்கு இந்த இணக்கமான வேலைத்திட்டங்களை தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதற்கு நாடு என்ற ரீதியில் அனைவரின் ஆதரவும் தேவை என்றார்.

## திறைசேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 50,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் இவ்வாறு ஏல விற்பனைசெய்யப்படவுள்ளதாகவும் அந்த வங்கி தெரிவித்துள்ளது

## தேர்தல்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவுசெய்வதுமற்றும்தேர்தல்களை நடத்துவதற்கான தயார் நிலை குறித்தும் இந்த சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது. மக்கள் போராட்ட முன்னணியின் சார்பாக நாங்கள் தேர்தல் செயலகத்திற்கு சென்றிருந்தோம்.

கூட்டணியை பதிவு செய்வது தொடர்பாக ஆராய்வதற்காகவும் ரணில்விக்கிரமசிங்க தொடர்ச்சியாக மக்கள் ஆணையற்ற ஒரு ஜனாதிபதியாக தொடர்வ தற்கான ஒரு முயற்சியை மேற்கொண்ட வண்ணமுள்ளார். தேர்தல்களை பிற்போடுவதற்கான ,ஜனநாயக முறையற்ற ஒரு செயற்பாட்டை செய்வதற்கான முழு வேலைகளை அவர் செய்துகொண்டிருப்பதாக நாங்கள் சந்தேகிக்கின்றோம் எனவேதான்அதுதொடர்பாகதேர்தல் ஆணையாளரிடம்சிலவிடயங்களை கேட்டறிந்திருந்தோம். சில முறைப்பாடுகளையும் முன்வைத்திருந்தோம்.

ஜனாதிபதிமக்கள்ஆணையற்று நாடாளுமன்றத்திற்குள் வந்தவர் என்ற விடயம் ஒன்று இருக்கும்போது மறுமுனையிலே எந்த ஒரு தேர்தலையும் நடத்தாமல் தொடர்ந்து தான் அதிகாரத்தை தக்கவைக்கவேண்டும் என்ற சிந்தனையிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றார்.

இதற்கு எதிராக நாங்கள தொடர்ச்சியாக குரல்கொடுப்போம் இந்த ஜனநாய விரோத செயற்பாடுகளிற்கு எதிராக எங்களுடைய போராட்டங்கள் தொடரும். அது மாத்திரமல்லாது தெற்கிலிருந்து மூன்று கட்சிகள் பல சமூக செயற்பாட்டாளர்கள் இணைந்து இந்த கூட்டணியை உருவாக்கியுள்ளோம் என்றார்.

## நாடாளுமன்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிப்பு நேற்று நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச, "கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் நாளை (இன்று) மட்டும் நாடாளுமன்றத்தினைக்கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாளை மறுதினம்(நாளை)கூட்டப்படவிருந்த நாடாளுமன்ற அமர்வு நிறுத்தி வைக்கப்படவுள்ளது. இதற்கு விசேட காரணங்கள் எவையும் இல்லை" என்றார்.

எவ்வாறாயினும்எதிர்க்கட்சியின் பிரதமகொறடாலக்ஷ்மன்கிரியெல்ல, கடன்மறுசீரமைப்புஉடன்பாடுகளை ஆளும் தரப்பு வழங்குவதற்கு மறுத்தமையால்விவாதத்தைநடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.. ஆகவே தான் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றார்

## சம்பந்தனுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவுள்ளதுடன், அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கானஅனைத்துபணிப்புரைகளையும் பிரதமர்தினேஷ்குணவர்தனஉரிய அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

இதேவேளை சம்பந்தனின் பூதவுடலுக்கான இறுதி அஞ்சலி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறினார். வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் எனப்படும்இலங்கைகடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்த 239 இந்திய மீனவர்கள் 32 படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஹிருணிக்காவின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதால் தன்னை பிணையில் விடுவிக்குமாறு ஹிருணிக்கா பிரேமச்சந்திர கொழும்பு மேல் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த பிணை மனு ஜூலை 4 கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது

## ரணிலால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

நற்செய்திஅடங்கியஅறிக்கையை பாராளுமன்றத்துக்குசமர்ப்பிப்பதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது. அதாவது சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட சில இணக்கப்பாடுகள் அடங்கிய ஆவணம். இந்த அறிக்கையை இன்று பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்போவதாக வெள்ளிக்கிழமை கூடிய கட்சி தலைவர்கள் கூட்டத்தின்போது அரசாங்கம் தெரிவித்தது.

ஆனால் இந்த அறிக்கையை இதுவரைநாங்கள்பார்த்ததில்லைஎன தெரிவித்தபோது, குறித்த அறிக்கை அனைத்தும் இணையத்தலத்தில் பதிவிடப்பட்டிருப்பதாக கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தஅரசதரப்பினர் தெரிவித்தனர். என்றாரலும் கட்சி தலைவர்கள்கூட்டம்முடிந்தபின்னர் அதுதொடர்பில்இணையத்தலத்தில் பார்வையிட்டபோது, அவ்வாறான எந்த அறிக்கையும்இருக்கவில்லை.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது அனைவரும் எமக்கு பொய் தெரிவித்துள்ளனர். திங்கட்கிழமை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து செவ்வாய்க்கிழமைக்கு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாகவேஅன்றுஅரசாங்கம்தெரிவித்தது. ஆனால் குறித்த அறிக்கையில் என்ன இருக்கிறது என இதுவரை எங்களுக்கு தெரியாது.

அத்துடன் இந்த கடன் மறுசீரமைப்பு ஆவணத்தில் இலங்கை அரசாங்கம் இதுவரை கைச்சாத்திடவில்லைஎன்றேஎமக்கு தகவல் கிடைத்திருக்கிறது. எனவே வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை அறிக்கையை அரசாங்கத்துக்கு எதிர்வரும் 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும். என்றாலும் அரசாங்கம்நிலையிற்கட்டளைகளை இடைநிறுத்தி, இன்று இந்த அறிக்கையைபாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாக தெரிவித்திருக்கிறது.

என்றாலும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எமக்கு இணக்கம் இல்லை. அதனால் வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை அறிக்கையைபாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதை ஒத்திவைத்து, உடன்படிக்கையில் அரசாங்கம் முறையாக கைச்சாத்திட்ட பின்னர் சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## இறப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருந்திய னுநஎழஜ 5 என்ற ஆழ்கடல் வள்ளத்திலிருந்த மீனவர்கள் 06 பேரில் மூவர் நேற்று முன்தினம்மரணமாகினர். அத்துடன் மற்றுமொரு மீனவர் நேற்று முன்தினம் இரவு மரணமானார். கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்தின் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் ஒருங்கிணைப்புடன் 'டெவோன் 5' என்ற இந்த ஆழ்கடல் மீன்பிடி வள்ளத்திலுள்ள 02 மீனவர்களே சிங்கப்பூர் கப்பலினால் மீட்கப்பட்டனர். தேவேந்திர முனையிலிருந்து சுமார் 365 கடல் மைல்களுக்கு அப்பால் ஆழ்கடலிலுள்ள (சுமார் 675 கிமீ) மீனவர்களை மீட்டு கரைக்கு அழைத்துவருவதற்காக, கடற்படையின் விஜயபாகு கப்பல் ஸ்தலத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது.

எனினும் நிலைமையை உணர்ந்த கடற்படை சர்வதேச கப்பல்களின் உதவியையும் நாடியது. இதன்படியே சிங்கப்பூர் கொடியிடப்பட்ட 'ஆஏ முழுவுயு ஊயுஆஐடு' என்ற சிங்கப்பூர் சரக்கு கப்பலொன்று, ஸ்தலத்துக்கு விரைந்து ஆபத்தான நிலையில் உயிருக்கு போராடிய இருவரை மீட்டுசிகிச்சையளித்தவாறுஇலங்கை தென்பகுதியை நோக்கி வந்தது . இங்கிருந்துபுறப்பட்டகடற்படையின்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# தென்கிழக்கு பல்கலை முகாமைத்துவ வர்த்தக பீட பீடாதிபதி மற்றும் துறைத்தலைவர்கள் கடமையேற்பு

திலீபன் எம்.பி. காட்டம்











இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதியாக பணியாற்றிய கலாநிதி எஸ். சபீனா எம்.ஜி.எச். அவர்களின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில் குறித்த பீடாதிபதி வெற்றிடத்துக்காக கடந்த 2024 .06.28 ஆம் திகதியன்று இடம்பெற்ற தெரிவுப் போட்டியில் பீடத்தின் உயர் சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதியாக பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா மற்றும் முகாமைத்துவ துறையின் துறைத்தலைவராக பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.சி. சல்பியா உம்மா, நிதி மற்றும் கணக்கியல் துறையின் துறைத்தலைவராக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.சி.என்.ஷபானா ஆகியோர் தங்கள் கடமைகளை உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் முன்னிலையில் ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) முகாமைத்துவ வர்த்தக பீடத்தில் இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழக வரலாற்றில் முன்னாள் மாணவர்களில் ஒருவர், பீடம் ஒன்றின் பீடாதிபதியாக தெரிவு செய்யப்படுவது இது நான்காவது சந்தர்ப்பமாகும். முதலாவதாக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கரும் இரண்டாவதாக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் மூன்றாவதாக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழி பீட பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச்.ஏ. முனாஸ் ஆகியோர் தெரிவாகி இருந்தனர்.

அதேவேளை நேற்று துறைத்தலைவர்களாக கடமைகளை பெறுப்பேற்ற இருவரும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு கருத்துத் தெரிவித்த புதிய பீடாதிபதி பேராசிரியர் முஸ்தபா, தான் மூன்று அம்சங்கள் கொண்ட அபிவிருத்தி திட்டங்களை மூன்று வருடத்தில் எட்டும் நோக்கில் குறித்த பணியை கையில் எடுத்துள்ளதாகவும் இதற்கு சம்பந்தப்பட்டவர்களின் ஆதரவு அவசியம் என்றும் தெரிவித்தார்.

கடமையேற்பின் மூலம் அடுத்த மூன்று வருட காலப்பகுதிக்கு முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதியாக பேராசிரியர் முஸ்தபாவும் பதவியேற்ற துறைத்தலைவர்களும் பணியாற்ற இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதிகளாக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் , இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச்.ஏ. முனாஸ், பொறியியல் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.எல். அப்துல் ஹலிம், நூலகர் எம்.எம்.றிபாவுடீன், பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர் உள்ளிட்டவர்களுடன் முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பேராசிரியர்கள் துறைத்தலைவர்கள் விரிவுரையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

# தனியார் பஸ்கள் பணிப் புறக்கணிப்பு



(பி.கேதீஸ்)

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் காரணமாக தலவாக்கலை – நுவரெலியா பிரதான வீதியில் சேவையில் ஈடுபட்டு வந்த அனைத்து தனியார் பஸ்களும் நேற்று (திங்கட்கிழமை) பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

லிந்துலை பிரதேசத்தில் நேற்று முன் தினம் (ஞாயிற்றுக்கிமை) இரவு வேளையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரண்டு தனியார் பஸ்களை சில நபர்கள் அல்லது குழுவினர் தாக்கி சேதப் படுத்தியதாகக் கூறி தனியார் பஸ் உரிமையாளர்கள் இந்தப் பணிப்பு றக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர்.

இதனால் தலவாக்கலை - நுவரெலியா மார்க்கத்தில் பயணிக்கும் அனைத்து தனியார் பஸ்களும் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக மத்திய மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலவாக்கலை நிலைய பொறுப்பதிகாரி தசந்தருவன் அபேவிக்ரம தெரிவித்தார்.

இரண்டு பஸ்களின் முன்பக்க கண்ணாடிகள் உடைக்கப்பட்டன எனவும், சில பஸ்களின் முன்பக்க விளக்குகள் அகற்றப்பட்டன எனவும் பஸ்களின் உரிமையாளர் தெரிவித்தார். பஸ்கள் நிறுத்தப்பட்ட இடத்தில் பொருத்தப் பட்டுள்ள பாதுகாப்பு கமராக்களை பரிசோதித்து சம்பந்தப்பட்ட நபர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுப்பதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலவாக்கலை - நுவரெலியா பிரதான வீதியில் பயணிக்கும் தனியார் பஸ்களின் வேலை நிறுத்தம் காரணமாக பாடசாலை மாணவர்கள், அலுவலக ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் மற்றும் ஏனைய பயணிகள் கடும் சிரமங்களையும் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.(05)

# பிளாஸ்டிக் இல்லாத நாட்டை உருவாக்கும் செயற்றிட்டத்தில் கிளிநொச்சி பொலிஸார்



பிளாஸ்டிக் இல்லாத நாட்டை உருவாக்கும் தொனிப்பொருளில் கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வரும் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் கூடைகளை பொருத்தமான இடங்களை இனம் கண்டு கூடைகளை வைத்து வருகின்றார்கள்.

குமரபுரம் 6 ஆம் வீதீ கலைச்செல்வி மோகனபவனின் நினைவு தினத்தை முன்னிட்டு பிளாஸ்டிக் இல்லாத நாட்டை உருவாக்கும் தொனிப்பொருளில் கிளிநொச்சி பொலிஸாருக்கு பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் கூடைகளை வழங்கியுள்ளார்.

இந்தப்பொருள்களை கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையிடம் வழங்கும் நிகழ்வில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதி பொலிஸ்மா அதிபர் சமந்தது சில்வா, கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி, கரைச்சி பிரதேச சபையின் பொறுப்பு அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் என பலர் கலந்து கொண்டுள்ளார்கள்.(05 - 113)





நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அரசினதும் உலகினதும் தோல்வி

தமிழ் மக்களின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் மறைந்துவிட்டார். அவர் தமிழ் மக்களின் பெருந் தலைவர் மட்டுமல்ல தமிழ் பேசும் மக்களின் தலைமகன் என்று முஸ்லிம் காங்கிரஸின் சர்ச்சைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினரான ஹரிஸ் தெரிவிக்கும் அளவிற்கு மற்றைய சமூகங்களாலும் மதிக்கப்பட்ட தலைவராக அவர் இந்த உலகை விட்டுச் சென்றிருக்கிறார். தமிழ் பேசும் மக்களின் தலைவராக சம்பந்தனால் உயர முடிந்ததா என்ற கேள்விக்கு, இனம் பற்றிய தீவிர சிந்தனை உடையவர்களுக்கு மத்தியில் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை மனதார விரும்பிய, அதற்காக மனமொப்பிப் பாடுபட்ட தலைவர் அவர் என்பதையும் அந்த இலக்கை அடைய யாருடைய கண்டனங்களையும் தூற்றுதல்களையும் கண்டுகொள்ளாமல் துணிந்து சில முடிவுகளை எடுத்த தலைவர் அவர்.

இனப்பிரச்சினைக்கானதீர்வுகுறித்தும்அவர்அதேநிலைப்பாட்டையே கொண்டிருந்தார். 2015இல் புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போதும் அதனால்தான் அவர் அத்தகைய விட்டுக்கொடுப்புக்களுடன் பயணிக்கத் துணிந்தார். அந்த அரசமைப்பிலும் இலங்கையை ஏக்கிய இராஜ்ஜியம் என்று குறிப்பிடவும் அது பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கும் நாடாக இருப்பதற்கும் அவர் சம்மதித்தார். பெயர்களில் நாம் தொங்கிக் கொண்டிருக்கவேண்டியதில்லை, உள்ளடக்கம்தான் முக்கியம் என்றார். அவருக்கிருந்த ஒரே அவா தன் காலத்திற்குள் எப்படியாவது ஒரு தீர்வைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்துவிட வேண்டும் என்பதுதான். அதனால்தான் அவர் அனைத்து இனத்தவர்களுடனும் விட்டுக்கொடுப்புக்களுடன் நடந்தார். அவர்களின் நம்பிக்கையைப் பெறத் தன்னை அர்ப்பணித்தார்.

அவரது முடிவுகள் அரசியல் பரப்பில் விமர்சனத்திற்குரியவையாக இருந்தன. தமிழ் இனம் தனது விடுதலைக்காகச் செலுத்திய விலைக்கு அவர் நியாயம் சேர்க்கவில்லை என்று அவர் மீது சேறு வாரியிறைக்கப்பட்டது. இன்றும் அவர் தூற்றப்பட்டுக்கொண்டே இருக்கிறார். தன்னைத் தூற்றுவார்கள், தூக்கி எறிவார்கள் என்று அவருக்குத் தெரியாமல் அவர் அந்தப் பணியை ஆற்றவில்லை. அவரின் கொள்கை தெளிவாக இருந்தது. ஒன்றில் வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தில் உள்ளக சுயாட்சியுடன் கூடிய சமஷ்டித் தீர்வை, அந்தப் பெயரில் அது கிட்டாது எனபது உள்ளிட்ட உச்ச விட்டுக்கொடுப்புக்களுடன் அடைவது. அப்படி தமிழ் மக்கள் தமது சுயாட்சி உரிமையைப் இலங்கைக்குள் பெற முடியவில்லை என்றால் அதனை சர்வதேசத்திடம் கோரிப் பெறுவது என்பது.

ஆனால், அவரது இந்த அயராத முயற்சியில் இலங்கையின் ஆளும் தரப்புக்களும் தமிழர் தரப்பு உலகம் என்று கருதிப் பேசும் மேற்குலக நாடுகள் மற்றும் இந்தியாவும் அவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொள்ளவேயில்லை. தானும் சம்பநதனும் இருக்கும்போதே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்று மீண்டும் மீண்டும் பல தடவைகள் சொல்லிய ரணில் விக்கிரமசிங்க இன்று தோற்றுவிட்டார். அவரால் சம்பந்தனின் காலத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைக்கூட முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. இறக்கும் வரைக்கும் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் இருந்து அறிய விரும்பிய முக்கிய விடயமாக இருந்தது தீர்வு குறித்து ஆளும் தரப்பினருடன் என்ன சொல்கிறார்கள், அதற்காக என்ன முயற்சிகளை எடுக்கிறீர்கள் என்பதாகத்தான் இருந்தது. ஆனால் ரணில் அரசுத் தலைவராகிய பின்னர்கூட சம்பந்தன் மறைவுக்கு முன்னால் ஒரு தீர்வைத் தரமுடியாது மு–முத் தோல்வியை அடைந்திருக்கிறார்.

அ–துபோன்றே மிக அவலமான போருக்குப் பின்னர், ஒரு இனப்படுகொலைக்குப் பின்னர் தமிழ் மக்களுக்கான தீர்வுக்கு சர்வதேசமும் இந்தியாவும் நியாயமாக ஒரு தீர்வைப் பெற்றுத் தரும் என்று அவர் அதீதமாக நம்பினார். நாடுகள் தமது சுயநலன்களைக் கடந்து ஆகக்குறைந்தபட்ச மனிதாபிமானத்துடனாவது நடந்துகொள்ளும் என்று அவர் உறுதியாக நம்பினார். அந்த சர்வதேச உதவிதான் தமிழர்களின் விடிவுக்கான ஒரே வழி என்றும் நம்பி அவர் செயற்பட்டார். அதனால்தான் அந்தச் சர்வதேச நாடுகளின் நலன்சார் முடிவுகளோடு ஒத்துப்போனார். ஆனால், அப்படித் தம்மை அளவுக்கதிகமாகவே நம்பிய ஒரு தலைவருக்கு குறைந்தபட்சத் தீர்வைக்கூட வழங்காமல், சொந்த மக்களே அவரைத் தூற்றும் இடத்திற்குக் கொண்டுவந்துவிட்ட இந்தியாவும் சர்வதேசமும்கூடத் தோற்றுப்போய்விட்டன.

இன்று சம்பந்தன் மறைந்துவிட்டார். தமிழர்களுக்கு ஓர் அரசியல் தீர்வை ஒன்றுபட்ட இலங்கைக்குள், பிளக்க முடியாத, பிரிக்க முடியாத நாட்டுக்குள், கூட்டாட்சி (சமஷ்டி) அடிப்படையில் வழங்கப்படவேண்டும் என்று விட்டுக்கொடுப்புக்களுடன் பாடுபட்ட தலைவர் மறைந்துவிட்டார். மறைந்தது அவர் மட்டுமல்ல அத்தகைய விட்டுக்கொடுப்புக்களுடனான அரசியல் வாய்ப்பும்தான். இனி ஒரு தமிழ்த் தலைவர் அத்தகைய விட்டுக்கொடுப்புக்களுடன் இலங்கை அரச தரப்புடன் பேச வரப்போவதில்லை. அவர்களுக்கு சம்பந்தன் ஒரு நல்ல பாடம். அந்த வகையிலும் தமிழ் மக்களை மீண்டும் கடினமான அரசியல் பாதையை நோக்கி, மென்வலு அரசியலில் இருந்து தீவிர அரசியலை நோக்கித் தள்ளிய வகையிலும் அரசும் உலகமும் தோற்றுப்போய்விட்டன.

# கண்காணிப்பும் கண்டிப்பும் அவசியம்

**இராதாகிருஷ்ணன்**

முருங்கையைஒடிச்சுவளர்க்கணும்,பிள்ளையை அடிச்சு வளர்க்கணும், பிஞ்சிலேயே பழுக்க விடக்



கூடாது, அடியாத மாடுபடியாது போன்ற முதுமொழிகள் இன்று வழக்கொழிந்து போய்விட்டன. காரணம், அதைப் பின்பற்றும் பெரியவர்கள் இல்லாததே எனலாம். வளர்ப்பு முறைகள் மாறிவிட்டன.

இதற்கேற்றாற்போல, இன்று வளரிளம் பருவத்தினர் பலர் அடாத செயல்களில் ஈடுபட்டு தங்கள் கல்வியையும், வாழ்க்கையையும் இழந்து, பெற்றோர்களையும் அவதிக்குள்ளாக்குகிறார்கள்.

நமது பழைய வளர்ப்பு முறை சரியா, இல்லையா என்ற விவாதம் ஒருபுறம். மேற்கத்திய நாடுகளில் நாம் பெற்ற பிள்ளைகளைத் தொட்டாலே சட்டம் பாயும் நிலை.



ஒரு வீட்டில் உள்ள பிள்ளைகள் சாதனைகள் செய்தாலும் மிகவும் மகிழ்ச்சி அடைந்து துள்ளிக் குதிப்பது பெற்றோர்களே. பிள்ளைகள் வேதனை தரும் காரியங்களைச் செய்தால், அதனால் முதலில் துயரம் அடைந்து துவண்டு போவதும் அப்பிள்ளைகளின் பெற்றோர்கள்தான்.



பிள்ளைகளின் வெற்றியும் தோல்வியும் பெற்றோர் வளர்ப்பின் போதான கண்டிப்பு, கண்காணிப்பு, தண்டிப்பு ஆகியவற்றில்தான் அடங்கியுள்ளது.

'வீடே பள்ளி, பெற்றோரே ஆசிரியர்' என சான்றோர் உரைத்தனர். இதில், தாயின் பங்கு அளப்பரியது. பொதுவாக பிள்ளைகள் தாயின் அன்பான

அரவணைப்பாலேவளருவதால், அவர்கள்தாயின் சொற்படியே நடப்பர். எனவே, தம் பிள்ளைகளுக்கு எப்போதும் தாய்மார்கள் நல்லதையே செய்து, நல்லவற்றையே போதித்து வளர்க்க வேண்டும்.

இக்கால சிறுவர்கள் கூலிப் படையினருடன் இணைந்து கொலைகள் செய்வதும், வன்மச் செயல்களில் ஈடுபடுவதும், படிப்பைத் தொடராமல் இருப்பதும், போதைப் பழக்கத்தில் ஈடுபட்டுத் தங்கள் இன்னுயிரை இழப்பதும், அதிநவீன வாகனங்களை ஓட்டி உயிரிழப்புகள் ஏற்படக் காரணமாவதும் தொடர்கதையாகி வருகிறது.

வீட்டிலும் பாடசாலையிலும் கண்காணிப்பு, கண்டிப்பு, தண்டிப்பு இன்மையால் மாணவர்கள் இப்போதெல்லாம் பல ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆசிரியர்களை மதித்து வந்த மாணவர்கள், அவர்களின் நல்வாழ்வுக் கருதி ஆசிரியர்கள் கண்டித்தால் அவர்கள் மீது வீண் பழி சுமத்தி அவமரியாதைக்குள்ளாக்கி அலட்சியப்படுத்தவும், தாக்கவும் துணிந்துவிட்டர்கள்.

காரணம், பெற்றோரின் பொறுப்பின்மைதான் என கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இன்று உலகம் உள்ளங்கைக்குள் அடங்கிவிட்ட நிலையில், சிறர்களின் செயல்பாடுகளை உற்றுநோக்கி அதற்கேற்றாற்போல, அவர்களின் உடலும் உள்ளமும் பாதிக்காத வகையில் வழிநடத்த வேண்டிய பெரும் பொறுப்பு பெற்றோர் கையில்தான் உள்ளது. அவர்களின் நட்பு வட்டாரத்தை அவ்வப்போது பெற்றோர்கள் கண்காணிக்க வேண்டும். அவர்களுக்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் செய்து கொடுத்திருக்கிறோமே என்று பெருமைப்பட்டுக் கொண்டு அவர்களை மனம் போன போக்கில் நடந்து கொள்ள அனுமதிப்பது தவறு.

தம்பிள்ளைகளின் எதிர்காலத்தை நல்ல முறையில் உருவாக்கிக் கொடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு இக்கால பெற்றோர்களிடம் சற்று அதிகமாகவே உள்ளது. பிள்ளைகள் செய்யும் செய்யும் சிறு தவறு வீட்டையும் சமூகத்தையும் பாதிப்பதோடு, நாட்டையும் அவமதிப்புக்குள் ளாக்கும் என்பதை பெற்றோர்கள் மறந்துவிடக் கூடாது.

# புத்தளம் ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தி அலுவலர் நியமனம்



(எம் சியாஜ்)

புத்தளம் ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தி நிலையத்திற்கான அபிவிருத்தி உத்தியோகத்தராக அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம் இர்பான் கல்வி அமைச்சால் (இணைப்பு அடிப்படையில்) நியமிக்கப்பட்டுள்ளார்.

புத்தளம் ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் எம்.எச்.எம் றியாஸிடம் தனது நியமன கடிதத்தை ஒப்படைத்து கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட இர்பான், புத்தளம் ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவரும், ஜாமிஆ நளீமிய்யா, பேராதனை பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பட்டதாரியும் ஆவார்.

கடந்த காலங்களில் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியில் ஆசிரியராகவும், முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் பகுதித் தலைவராகவும், முகாமைத்துவ குழுவின் செயலாளராகவும் செயற்பட்டுள்ள இவர் புத்தளம் வலயக் கல்விப் பணிமனையின் பொது நிர்வாகப் பகுதி, ஆசிரியர் ஸ்தாபனப் பகுதி, கணக்குப் பகுதிகளில் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# கோணேச்சர ஆலய புனிதத்தை பாதுகாக்க கோரிய கவனவீர்ப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருக்கோணேச்சர ஆலயத்தின் புனித தன்மையை பாதுகாக்க கோரிய கவனவீர்ப்பொன்று நேற்று (திங்கட்கிழமை) திருகோணமலை நகர சபைக்கு அண்மையில் உள்ள திருக்கோனேஸ்வர ஆலய பரிபாலன சபைக்கு முன்னால் இடம்பெற்றது.



குறித்த கவனவீர்ப்பை திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையினர், தொண்டர்கள் மற்றும் சைவ அடியார்கள் இணைந்து இதனை ஏற்பாடு செய்தனர். திருக்கோணேஸ்வர ஆலய அண்மித்த கடைத் தொகுதியில் கசிப்பு விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதாகியதையடுத்து அதனை சீல் வைக்கச் சென்ற திருகோணமலை நகர சபை ஊழியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனைக் கண்டித்தும் புனிதத் தன்மையைப் பாதுகாக்க அரச துறை அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் இதன் போது தெரிவித்தனர்.

இந்தப் புனித ஆலய சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் சட்ட ரீதியாக கடையை சீல் வைக்க சென்றவரை தாக்கியதும் கண்டிக்கத்தக்கது எனவும் இதன் போது தென்கயிலை ஆதினம் அகத்தியர் அடிகளார் தெரிவித்தார்.

இதில் ஆலய பரிபாலன சபை தலைவர் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

கிழக்குமாகாணஆளுனருக்கு இது தொடர்பான மகஜர் ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது. குறித்த கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இப் புனித தளத்தில் சில வருடங்களுக்கு முன்னர் தற்காலிக கடைகள் அமைத்து வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பல இடர்பாடுகளை சந்திக்க நேரிடுவதாக ஆலய பரிபாலன சபை மூலமாக உரிய தரப்புக்களுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் எடுத்துக் கூறப்பட்டது. இது தொடர்பில் 2019.06.10 மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் போது ஆலயம் ஊடாக செல்லும் கடைகள் அகற்றப்பட்டு வேறொரு இடத்தில் அமைத்துக் கொடுப்பது தொடர்பான விடயத்தை அனைவரும் ஏகமானதாக ஏற்றுக் கொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக புத்தசாசன அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ,கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர்கள் 11.10.2022 குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு கடை உரிமையாளர்களுடன் கலந்துரையாடி இணக்கம் தெரிவிக்கப்பட்டும் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவில்லை இவ்வாறான சூழ்நிலையில் அண்மையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவர் சட்டவிரோத செயற்பாடு ஒன்று இடம் பெற்றது.

எனவே ஆலயத்தின் புனிதத்தை பாதுகாக்க இது போன்ற நடவடிக்கையில் இருந்து பாதுகாத்து வியாபாரிகளின் பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்படாது ஏலவே அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் மாற்று இடத்தை வழங்கி வியாபாரத்தை நடாத்த நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml
Milk Drink
Cocacola M
Pepsi M
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கடைக்கு சீல்வைக்கச்சென்ற ஊழியர் மீது கோர தாக்குதல்

## திருகோணமலையில் சம்பவம்

திருக்கோணேச்சரம் ஆலயத்தை அண்மித்த கடைத்தொகுதி ஒன்றில் தடைசெய்யப்பட்ட கசிப்பு ரக மதுபானம் விற்பனை செய்யப்பட்ட கடை திருகோணமலை நகரசபையினரால் சீல் வைத்து, பூட்டப்பட்டபோது நகரசபை ஊழியர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர் ஒருவரால் தாக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் திருகோணமலை - திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை அண்மித்த கடையொன்றில் தடை செய்யப்பப்பட்டகசிப்புவகைமதுபானம் விற்பனைசெய்யப்படுவதாககருதப்பட்டு அந்தக் கடையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இந்நிலையில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை அந்தக் கடைக்கு சீல் வைத்து, பூட்டப்பட்டதாக திருகோணமலைநகரசபைசெயலாளர் தே.ஜெயவிஷ்ணுசெய்தியாளர்களுக்கு தெரிவித்தார்.

நகரசபையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அப்பகுதிக்கு நகரசபை அதிகாரிகள் விரைந்துகடையைசீல்வைக்கமுற்பட்டபோதேஅங்குஇனம்தெரியாதநபர்ஒருவரால் அரசகடமைகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதோடு, நகரசபை உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்என்றும்அவர்தற்போதுதிருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுசிகிச்சைபெற்றுவருகிறார் எனவும் நகரசபை செயலாளர் இதன்போது தெரிவித்தார்.

மேலும், சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்த பொலிஸாரும் தாக்குதலை தடுக்க முயற்சிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (05)

# நெல் மூடைகளை ஏற்றிச் சென்ற லொறி வாழைச்சேனையில் விபத்து



நெல் மூடைகளை ஏற்றிச் சென்ற லொறியொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. வாழைச்சேனைபொலிஸ் பிரிவுக்குட்பட்டபுணானைமட்டக்களப்பு பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி பகுதியிலிருந்து பொலன்னறுவை நோக்கி நெல் மூடைகளை ஏற்றிச்சென்ற லொறியே விபத்தில் சிக்கியுள்ளது.

எதிரே வந்த வாகனம் ஒன்றுக்கு வழி விடும்போது லொறி பாதையை விட்டு விலகி, கவிழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் லொறி சேதமடைந்துள்ளது. எனினும், லொறிசாரதியும் உடன் பயணித்த மற்றுமொருவரும் காயங்களின்றித் தப்பியுள்ளனர். (05)

# யானையைக் கண்டு பயந்து ஓட்டோவை திருப்பிய சாரதி விபத்தில் சிக்கிச் சாவு



புத்தளம் - அனுராதபுரம் வீதியின் 7 ஆம் கட்டைப் பகுதியில் ஓட்டோவும் வானும் மோதியதில் ஓட்டோ சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரத்தில் இருந்து புத்தளம் நோக்கி பயணித்த ஓட்டோ சாரதி, வீதியைக் கடந்த காட்டு யானையைக் கண்டு, பயந்து, தனது வாகனத்தை திருப்பமுற்பட்டபோது, ஓட்டோ புத்தளத்திலிருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்த வான்மீது மோதியுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் இராஜாங்கனை சோலவெளபிரதேசத்தைச்சேர்ந்த 50 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துடன் தொடர்புடைய வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், கருவலகஸ்வெள பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வீதியினூடாக தினமும் காட்டு யானைகள் நடமாடுவதாலும் கவனக்குறைவாக வாகனம் செலுத்தப்படுவதாலும்இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இந்த வீதியில் இதுபோன்ற பல விபத்துக்கள் இடம்பெற்று, பல உயிர்கள் பலியாகியுள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (05)





காலைக்கதிர் Kalaikkathir

## இறப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயபாகு கப்பலுக்கு இருவரையும் நேற்று இரவு சுமார் 10 மணியளவில் ஆழ்கடலில் வைத்து ஒப்படைக்க திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் சிங்கப்பூர் கப்பலில் சிகிச்சைபெற்று வந்த 05 ஆவது மீனவரும் மரணமானதாக கடற்படைக்கு சிங்கப்பூர் கப்பல், அறிவித்துள்ளது. ஆபத்தான நிலையிலுள்ள 06 ஆவது மீனவரை இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவரையும் மரணமான மற்றைய மீனவரின் சடலத்தையும் இன்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு கொண்டுவர முடியுமென்றும் கடற்படை பேச்சாளர் கப்டன் கயான் விக்கிரமசூரிய தெரிவித்தார்.

ஏற்கனவே ஆழ்கடலில் மரணமான 04 மீனவர்களது சடலங்களும் ஆழ்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படகில் இன்னமும் இருப்பதாகவும் மற்றுமொரு ஆழ்கடல் வள்ளத்தின் மூலம் அந்த வள்ளத்துடன் அவர்களது சடலம் கரைக்கு கொண்டுவரப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அந்த வள்ளம் கரைக்கு வந்த பின்னரே மரணத்துக்கான காரணம் மற்றும் அவர்கள் அருந்திய திரவம் என்ன என்பது பற்றி அறிய முடியுமென்றும் அவர் தெரிவித்தார். இந்த மீன்பிடி படகு தங்காலை மீன்பிடி துறைமுகத்திலிருந்து சென்றுள்ளது. தற்போது இப்படகு தங்காலை கடலிலிருந்து சுமார் 365 கடல் மைல் தொலைவில் இருப்பதாகவும் வெறொரு படகின் உதவியுடன் கரைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

## விவசாயத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றமும் எதிர்காலமும்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாரம்பரிய விவசாயத்திற்கு அப்பால் சென்று வளர்ந்து வரும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வது விவசாய அமைச்சின் பொறுப்பாகும். தற்போது இதனை வெற்றிகரமாக நிர்வகித்து வருகிறோம். குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் எதிர்வரும் ஆறு போகங்களில் நெற்பயிர் அறுவடையின் அளவை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற இலக்கை அடையத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

அதற்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப பெக்கேஜ் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம். மேலும் கைவிடப்பட்ட வயல் நிலங்கள் உட்பட அனைத்து நெல் வயல்களும் நெற்பயிற்செய்கைக்குப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது. பயிரிடப்பட்ட நிலத்தை ஏனைய பயிர்களுக்கு பயன்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். தற்போது நெற்செய்கையின் வெற்றிகரமான பெறுபேறுகள் எட்டப்பட்டுள்ளதுடன் 800,000 மெற்றிக் தொன் அரிசி அறுவடை கிடைத்துள்ளது.

நெல் விலை தொடர்பில் அமைச்சு என்ற வகையில் தலையிட முடியாது. ஆனால் திறந்த பொருளாதாரத்தில் விலை பராமரிப்பு நியாயமாக இருக்கும் என்று அரசாங்கம் நம்புகிறது. பொருட்களின் விலை உயர்வு ஓரிரு முறை நடந்தாலும், அரசு தலையிட முடியாது. தொடர்ந்து நடந்தால், தலையிட முடியும். தற்போது இரண்டு வகையான அரிசிகளின் கையிருப்பே பேணுப்பட்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் அனைத்து வகை அரிசிகளும் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டு சந்தைக்கு விநியோகிக்கப்படும்.

மேலும், உலர் வலயத்தில் அதிக கவனம் செலுத்தி, விவசாயத் திணைக்களத்தின் பரிந்துரையின் பேரில், பயன்படுத்தப்படாத வயல் நிலங்கள் ஏனைய பயிர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. இது உணவு உற்பத்தியில் சாதகமான முன்னேற்றமாக இருக்கும்.

பாரம்பரிய பயிர்ச்செய்கை முறைக்கு அப்பால் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கையாக விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்திற்கு 2500 மில்லியன் ரூபா வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி 26 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பல்வேறு விவசாய நடவடிக்கைகளுக்கு வட்டியில்லா கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேநேரத்தில், இளைஞர் விவசாய தொழில்முனைவோர் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. இதனால் விவசாயம், பெருந்தோட்டக் கைத்தொழில், கால்நடை மற்றும் மீன்பிடித் தொழில் ஆகிய துறைகளில் இளைஞர்களின் தொழில் முனைவோர் வாய்ப்புகள் அதிகரித்துள்ளதோடு, புதிய தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினால் இளைஞர் சமூகத்தை இந்தத் துறைக்கு ஈர்க்கும் முயற்சிகள் வெற்றியடைந்துள்ளன.

தற்போது விவசாயத் துறையை உள்ளூர் எல்லைக்கு அப்பால் வெளிநாட்டுச் சந்தையை இலக்காகக் கொண்டு விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஸ்ட்ரோபரி, மாம்பழம், அன்னாசி போன்ற பழப் பயிர்களை ஏற்றுமதி செய்யும் போக்கு அதிகரித்துள்ளது.

இது தவிர, விளைச்சல் ஏற்ற இறக்கங்கள் மற்றும் பயிர் இழப்புகளை மையமாக வைத்து தம்புள்ளையில் குளிரூட்டி நிலையமும் நிறுவப்படவுள்ளது. தகுந்த பயிர்கள் பற்றி விவசாயிகளை அறிவூட்டி வருகிறோம். எமது அமைச்சின் கீழ் இயங்கும் பொருளாதார நிலையங்களின் முகாமைத்துவத்தினால் பயிர் சேதத்தை சுமார் 50 சதவீதம் வரை குறைக்க முடிந்துள்ளது. விவசாயிகளின் ஆதரவுடன், பயிர்களை முறையாக சந்தைக்கு விடுவதற்கான முறையைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறோம்.

அறுவடைக்குப் பிந்தைய பாதிப்புகளை குறிப்பாக போக்குவரத்தின் போது குறைக்க ரயில்வே சேவையைப் பயன்படுத்துவது குறித்து ஏற்கனவே போக்குவரத்து அமைச்சுடன் ஆராய்ந்து வருகிறோம். தற்போதும் பெலியத்தையிலிருந்து பயணிக்கும் ரயில் சேவைகளை ஏனைய மாகாணங்களிலும் சேவையில் ஈடுபடுத்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது.' என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# 'ஈஸி கேஷ்' முறையில் ஹெரோயின் விற்பனை செய்த கணவன், மனைவி பதுளையில் கைது

'ஈஸி கேஷ்' முறையில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட கணவன், மனைவி இருவரும் பதுளை பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவுவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடம் இருந்து 15,700 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் 47 வயதுடைய ஆண் ஒருவரும் 37 வயதுடைய பதுளை ஹப்புஹின்ன பகுதியை சேர்ந்த பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் ஏற்கனவே திருமணம் ஆனவர்கள் எனவும் இவர்கள் இருவரும் தனது குடும்பத்தை கைவிட்டுவிட்டு, இவ்விருவரும் கணவன் மனைவியாக பசறை புத்தலை வீதியில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து வாழ்ந்து வருவதாகவும், இவர்கள் பதுளையை அண்மித்த பகுதிகளுக்கு ஹெரோயின் விற்பனை செய்வதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் 5000 ரூபா பணத்தை ஈஸி கேஸ் பணம் மூலம் அனுப்பி பசறை பதுளை வீதியில் 7ஆம் கட்டை பகுதியில் வைத்து சந்தேக நபரிடம் இருந்து 130 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை பெற்றுக்கொண்டபோது பொலிஸார் அந்த நபரை கைது செய்து அவரை சோதனையிட்டபோது, அவரிடமிருந்து மேலும் 7400 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் 12000 ரூபா பணமும் கையடக்க தொலைபேசி ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் பசறை புத்தல வீதியில் வாடகைக்கு பெற்றுக்கொண்ட வீட்டில் சோதனையை மேற்கொண்டபோது அவ்வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 8300 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அந்த நபரின் காதல் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர். (05)

# இலங்கையின் கடற்படுக்கையிலுள்ள மிகவும் பெறுமதியான கனிய வளம்

## கண்வைத்தது அதானி நிறுவனம்



கொழும்பு துறைமுகத்தின் மேற்குமுனை அபிவிருத்தி மற்றும் மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள இந்தியாவின் அதானி குழுமம் இலங்கையில் கடல்படுக்கையில் கனிமங்களை அகழும் திட்டத்திலும் ஈடுபடவுள்ளது.

கோபல்ட் கனிமங்களை கோபால்ட் வைப்பு அகழ்வதற்கான நடவடிக்கையில் தாய்வானை சேர்ந்த உமிகோர் நிறுவனத்துடன் இணைந்து அதானி குழுமம் செயற்படவுள்ளது என இது குறித்த பேச்சுகளில் ஈடுபட்டுள்ள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த கனிமங்கள் பல தொழில்துறைகளுக்கும் இராணுவபயன்பாட்டிற்கும் மிகவும் அவசியமானவை

இது குறித்து இன்னமும் பேச்சுகள் இடம்பெறுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளிற்கும் இடையிலான கடற்படுக்கை உரிமை பிரச்சினைக்கு தீர்வைக் கண்டதன் பின்னர் இந்திய பெருங்கடலின் ஆழத்தில் பதிந்துள்ள பெறுமதிமிக்க கனியங்களைக் கண்டறிவதற்காக இந்தியாவுடன் கூட்டுசேர்வதன் மூலம் குறிப்பிடத்தக்க நன்மைகளைப் பெறுவதற்கு இலங்கை எண்ணியுள்ளது.

ஐக்கியநாடுகளின் கடல்சட்ட ஒப்பந்தத்தின் படி இலங்கை தனது கண்ட அடுக்கை 200 கடல்மைல்களில் இருந்து நீடித்துள்ளது. 2009 இல் சர்வதேச கடற்படுக்கை ஆணையகத்திடம் சமர்ப்பித்த விண்ணப்பத்தைத் தொடர்ந்து இது சாத்தியமாகியுள்ளது.

தற்போது இலங்கைக்கு கடற்கரையிலிருந்து 200 மைல்களிற்கு விசேட உரிமை காணப்படுகின்றது ,இலங்கை இதன் காரணமாக மத்திய இந்திய சமுத்திரத்தில் கோபல்ட்டுகள் நிறைந்த பெரோ மங்கனீஸ்; மேலோடுகளை பொருளாதார நோக்கங்களிற்காக பயன்படுத்தலாம்.

எனினும் சர்வதேச கப்பல் பாதைக்கு பாதிப்பை ஏற்படுத்தாத விதத்தில் இதனை முன்னெடுக்கவேண்டும்.

இந்தியாவும் தனது எல்லையிலிருந்து 350 கடல்மைலிற்கு உள்ள தனது கண்ட அடுக்கிற்கு உரிமையை கோரியுள்ளது.

இந்தியா அதற்கான உத்தியோகபூர்வ அங்கீகாரம் கிடைத்ததும் அகழ்வில் ஈடுபடுவதற்காக காத்திருக்கின்றது.

இந்த சர்ச்சையை தீர்ப்பதற்கு இரு நாடுகளிற்கும் இடையே ஒரு மூலோபாய கூட்டாண்மையை உருவாக்குவதற்கான பேச்சுகள் முடிவடையும் வரை காத்திருக்க விரும்பாத இந்தியா கோபால்ட் நிறைந்த பகுதிகளை ஆராய்வதற்காக சர்வதேச கடற்படுக்கை அதிகார சபையிடம் 2024 ஜனவரி முதலாம் திகதி விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளது.

எனினும் அபானசி நிக்கிட்டின் கடல்மலைப்பகுதி இலங்கையின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது எனத் தெரிவித்து சர்வதேச கடற்படுக்கை அதிகார சபை இந்தியாவின் இந்த விண்ணப்பத்தை நிராகரித்துள்ளது. இது குறித்து சர்வதேச அமைப்பு இந்திய அதிகாரிகளிற்கு அறிவித்துள்ளது.

எனினும் சர்வதேச கடற்படுக்கை அதிகார சபை மார்ச் மாநாட்டில் ஆரம்பிப்பதற்கு ஏற்ற விதத்தில் இ;ந்தியா தனது பதிலை அனுப்பவில்லை.

இந்த சூழ்நிலையில் இருநாடுகளும் இந்த விவகாரத்திற்கு பரஸ்பர இணக்கப்பாட்டுடன் தீர்வைக் காணவேண்டிய நிலையில் உள்ளன.

இலங்கை கடற்பரப்பில் சீன கப்பல்களின் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து அதன் அதிகார வரம்பிற்கு உட்படாத இந்து சமுத்திர கடற்படுக்கையை ஆராய்வதற்கான உரிமையை இந்தியா கோருகின்றது.

இலங்கையின் அதிகாரத்தின் கீழ்வரும் கோபால்ட் அதிகம் காணப்படும் அபனசி நிகிடின் கடல்மலையை ஆராய்வதற்கும் இந்தியா விரும்புகின்றது.

இந்த கடல்மலையில் பில்லியன் டொலர்கள் பெறுமதியான கோபால்ட்கள் காணப்படுகின்றன.

இந்த கனிமங்கள் பல தொழில்துறைகளுக்கும் இராணுவ பயன்பாட்டிற்கும் மிகவும் அவசியமானவை. (05)

# கற்பிட்டி நுரைச்சோலை பாடசாலையில் கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சி ஏற்பாடு




(எம் சியாஜ்)

நுரைச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றுவரும் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒன்றாக தரம் 5 புலமை பரீட்சை எழுத தயாராகிவரும் பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோரையும் உரிய முறையில் உளரீதியாக தயார்படுத்துவதற்கான கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சி ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம் இமாரான் தலைமையில் பாடசாலையின் வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த உளவியல் வழிகாட்டல் நிகழ்ச்சியில் இலங்கையின் தலைசிறந்த உளவியல் பயிற்சிவிப்பாளரான எம்.என் ஆலீப் அலி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்காக தனித்தனியாக வெளவேறு தலைப்புகளில் மேற்படி வழிகாட்டல் நிகழ்ச்சியை நடத்தவுள்ளார்.

இந்நிகழ்ச்சியின் நோக்கம் தரம் 5 புலமைபரிசில் பரீட்சையின் அடைவுமட்டத்தை அதிகரிப்பதுடன் மாணவர்களின் மார்க்கத்துடன் கூடிய ஒழுக்கவியல் நடத்தை மாற்றத்தையும் எதிர்பார்ப்பதுடன், பெற்றோர்களுக்கும் தமது பிள்ளைகளை உரிய முறையில் வழிநடத்தும் பயிற்சியையும், ஆரம்பபிரிவு ஆசிரிய ஆசிரியைகளுக்கு சுவாரசியமான நவீன கற்பித்தல் முறைமைகளை அறிமுகப்படுத்துவதாகும். இந்நிகழ்ச்சியில் தரம் 5 மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (05)

# இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கறுப்பு பட்டி அணிந்து போராட்டம்

## இன்று முன்னெடுப்பு




ஜனாதிபதியின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாடசாலைகளுக்கு முன்பாக இன்று மதியம் 1.30 மணிக்கு கறுப்பு பட்டிகளை அணிந்தவாறு போராட்டம் நடைபெறும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சேவை சங்க யாழ்ப்பாண கல்வி வலய செயலாளர் தாராளசிங்கம் பிரகாஷ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்குகிழக்கில் ஆசிரியர் அதிபர்கள் போராட்டம் நடைபெறவில்லை என்று அரசாங்கம் பிரிவினைவாத கருத்தை வெளியிட்டமையை கண்டித்தும் ஜனாதிபதி மகாநாயக்க தேரர்களுடனான சந்திப்பில் ஆசிரியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்று கூறியமைக்கு எதிராகவும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த ஊடக சந்திப்பில் இலங்கை அதிபர் சேவை சங்க யாழ் மாவட்ட பிரதிநிதி துரைராசா ஜீவானந்தன், இலங்கை ஆசிரியர் சேவை சங்க வலிகாமம் கல்வி வலய பிரதிநிதி பரமசிவம் கஜமுகன் ஆகியோரும் கருத்து தெரிவித்தனர்.

(05)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கோ பயிர்ச்செய்கை



வட மாகாணத்தில் முல்லைத் தீவு மாவட்டத்தில் கொக்கோ பயிர்ச்செய்கை வெற்றியளித் துள்ளதன் மூலம் பல்வேறு வகை யான பெறுமதி சேர் உணவுப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையை பொறுத்தவ ரையில் கொக்கோ பயிர்ச் செய்கை யானது இடை, ஈர வலயங்களில் அதிகளவாக செய்கையிடப்பட்டு வருகிறது.



இருப்பினும்,உலர்வலயத்திலும் இப்பயிர்செய்கையைமேற்கொள்ள முடியும்என்பதற்குஎடுத்துக்காட்டாக முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் கொக்கொ செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் ஒரு முயற்சியாக டார்க்சொக்லேட்செய்யும்பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்துள்ளது.

மாவட்ட விவசாய பயிற்சி நிலைய பண்ணை முகாமையாளர் துமிலன் வழிகாட்டலுடனும், முல்லைத்தீவு பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் யாமினி சசீலன் ஆலோசனையுடனும், ஒட்டுசுட்டான் விவசாய போதனாசிரியர் அனோதினி சிவனேஸ்வரன் கொக்கோ பயிர் மூலம் டார்க் சொக்லேட் செய்யும் முறை பற்றி விளக்கமாக கூறியிருக்கிறார்.

கொக்கோவில் இருந்து பல்வேறு வகையான பெறுமதி சேர் உற்பத்திகளை மேற்கொள்வதுடன் கொக்கோவில் அதிகளவு இலிப்பிட்டு, புரதம், மாப்பொருள், நார்பொருள். அத்தியாவசியமான அமினோ அமிலங்கள் என்ப னவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொக்கோ பயிர்ச் செய்கையை முல்லைத்தீவு மாவட்டம் உட்பட வட மாகாணத்தில் விஸ்தரிப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி தமிழ் அரசு கட்சி அலுவலகத்தில் பெருந் தலைவர் சம்பந்தனுக்கு அஞ்சலிகள்





மறைந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் கட்சியின் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் இந்த உணர்வுபூர்;வ அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேற்படி அஞ்சலி நிகழ்வில் சிறிதரன் எம்.பி. உரையாற்றினார்.

அவர் தெரிவிக்கையில் -

தமிழ்த்தேசிய இனத்தின் மிகப்பெரும்



தலைவராக நீண்ட காலம் தமிழ் இனத்தை வழிநடத்திய பெருந்தலைவரை தமிழ்த்தேசிய இனம் இழந்துள்ளது.

அவர் மூப்பின் காரணமா இறந்திருந்தாலும் தமிழர்களின் விடுதலைப் பயணத்தில் 1960 இற்கு பின்பு சிறந்த பணிகளை ஆற்றிய சட்டத்தரணியும் எதிர்கட்சிதலைவரும்எமதுகட்சியின்தலைவருமான சம்பந்தன்ஐயாவின்இழப்புதமிழ்மக்களைப்பொறுத்த வரை காலத்தின் பேரிழப்பாகும்.

அவருடைய இறப்பு நாளிலே அவருடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும் கருத்தில் கொண்டு அவர் விட்டுச்செல்லும் பயணத்தில் நாங்கள் எல்லோரும் ஒன்றாக இணைந்து எங்கள் தமிழ் மக்களுக்கான தேசிய அபிலாசைகளை தமிழ்த்தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கான நீண்ட பயணத்தில் எங்களுடைய கரங்களை ஒன்றாக இணைத்து பயணிப்பதே நாங்கள் அவருக்கு செய்யும் பணியாக மாறும்.

அதிலும் குறிப்பாக தென் தமிழீழத்தில் உதித்த ஒரு மனிதனாக வடக்கையும் கிழக்கையும் இணைத்து வடக்கு, கிழக்கு இணைப்புக்கு மூலகாரணமாக இருந்து பெரும் பாங்காற்றியவர் இரா.சம்பந்;தன். தேசியத்தலைவராலும்அங்கீகரிக்கப்பட்டதலைவரை எங்கள் தேசம் இழந்திருக்கிறது.. (05-113)

# இரா. சம்பந்தனின் மறைவுக்கு வடமாகாண ஆளுநர் இரங்கல்

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் ஆர்.சம்பந்தனின் மறைவுக்கு வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

குறித்துதனது இரங்கல்செய்தியில் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 14 ஆவது எதிர்க்கட்சித் தலைவரும், சிரேஷ்ட அரசியல்வாதியும், சட்டத்தரணியுமாகிய இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவுச் செய்தி அறிந்து கவலை அடைகின்றேன்.

சுமார் ஐந்து தசாப்த அரசியல் வரலாற்றில் மிக நீண்ட காலம் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக இலங்கை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்ததுடன், தமிழ் மக்களின் உரிமைக்காக சர்வதேச ரீதியிலும் செயற்பட்ட தலைவராக காலம் சென்ற இரா. சம்பந்தன் காணப்படுகின்றார்.

இன ஐக்கியம், ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்பவற்றின் அடிப்படையில் நாட்டு மக்களின் நன்மைகருதி அன்னார் செயற்பட்டார் என்றால் மிகையாகாது. இத்தகைய ஒரு பெரும் தலைவரின் இழப்பானது தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அன்னாரின் மறைவானது இலங்கை வாழ் மக்களுக்கு பேரிழப்பாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஓங்கி ஒலித்துகொண்டிருந்த குரல் இன்று மௌனித்துள்ளது. காலம் சென்ற திருவாளர் இராஜவரோதயம் சம்பந்தனின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன். அன்னாரின் பிரிவால் மீளாத் துயரில் வாடும் அவரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் ஏனைய அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

(05)

# சம்பந்தனின் மறைவுக்கு தமிழக முதல்வர் இரங்கல்





இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்மந்தன்மறைந்தசெய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். சம்பந்தன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது அமைப்பினருக்கும், இலங்கை தமிழ் உறவுகளுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கல் என தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டிருக்கும் செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இலங்கைதமிழர்களின்முதுபெரும் அரசியல் தலைவர். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

தமிழர்கள் மட்டுமல்லாது சிங்களவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் மரியாதையை பெற்ற அரும்பெரும் தலைவராக திகழ்ந்தவர் சம்பந்தன் அவர்கள். இறுதி மூச்சு வரையிலும் தமிழ் மக்களின் நலனுக்காகவே சிந்தித்தார். செயல்பட்டார். நாடாளுமன்றவாதியாக அரை நூற்றாண்டு காலம் அவர் ஆற்றிய பங்களிப்புகள் இலங்கையின் அரசியலில் பாரதூரமான தாக்கத்தை செலுத்தி வந்தன. இலங்கை தமிழ் மக்களுக்கான அதிகார பகிர்வுக்காக மிக நீண்ட காலம் அறவழியில் சம்பந்தன் அவர்கள் போராடி வந்தார்.

இந்தியாவோடும், தமிழ்நாட்டுடனும் மிகச்சிறந்த நட்புறவை சம்பந்தன் அவர்கள் பேணி வந்தார். தலைவர் கலைஞர் அவர்களின் நண்பராகவும், இலங்கை தமிழ் மக்களின் பிரதிநிதியாகவும், பலமுறை அவரை சந்தித்து மிகவும் முக்கியமான அரசியல் விவகாரங்கள் குறித்து சம்பந்தன் ஆலோசித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டில் சம்பந்தன் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது, ’ எனது அருமை நண்பர் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களுக்கு பிறகு தமிழர் ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ஆகி உள்ளது மகிழ்ச்சிக்குரியது. இலங்கை தமிழர்கள் அனைவரும் தங்கள் வாழ்வில் விடிவு காலம் ஏற்படாதா..! என நீண்ட நாள்களாக எதிர்நோக்கி இருக்கும் வேளையில் எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமக்கெல்லாம் ஓர் நம்பிக்கையை தருகிறது’ என முத்தமிழ் அறிஞர் கலைஞர் வாழ்த்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

2016 ஆம் ஆண்டு 13 ஆவது முறையாக தலைவர் கலைஞர் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது சம்பந்தன் அவர்களும், ’இது ஒரு சாதாரண சாதனையல்ல. எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய ஒரு சாதனையாகும். இலங்கைதமிழ்மக்களுடைய பிரச்சினைக்கு ஒரு நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வை பெறுவதற்கு உங்களுடைய ஆக்கபூர்வமான பங்களிப்பு தொடர வேண்டும்’ என வாழ்த்து தெரிவித்திருந்தார். ஈழ தந்தை செல்வா, நாவலர், அமிர்தலிங்கம் ஆகியோருக்குப் பிறகு இலங்கை அரசியலில் மிகவும் போற்றத்தக்க தலைவராக விளங்கிய இரா. சம்பந்தன் அவர்களின் இடத்தை இலங்கை அரசியலில் எவராலும் எளிதில் ஈடு செய்ய முடியாதது. அவரது மறைவு இலங்கை தமிழ் மக்கள் மட்டுமின்றி உலகெங்கிலும் வாழும் தமிழ் சொந்தங்களுக்கும் பேரிழப்பாகும்.

இலங்கை தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்த மாபெரும் அரசியல் ஆளுமையான சம்பந்தன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது அமைப்பினருக்கும், இலங்கை தமிழ் உறவுகளுக்கும், தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். - என குறிப்பிட்டுள்ளார்.

(05)

# தமிழ் அரசுக் கட்சி கொடி அரைக்கம்பத்தில்

## சம்பந்தனுக்கு அஞ்சலி






சம்பந்தன் மறைவு தமிழ் தேசிய பரப்பில் உள்ள அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மறைந்த ஈழத் தமிழர்களின் மூத்த பெரும் தலைமையும்தமிழ்தேசியகூட்டமைப்பின்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனுக்கு அஞ்சலிசெலுத்தும்வகையில்நேற்று (திங்கட்கிழமை) மட்டக்களப்பில்தமிழரசுக்கட்சின்கொடிஅரக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழரசுக்கட்சின் மட்டக்களப்பு மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் களுவாஞ்சிகுடியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழரசுக்கட்சின் மட்டக்களப்பு மாவட்ட கிளையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானஇரா.சாணக்கியன் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது கட்சி கொடிஅரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டதுடன் அஞ்சலி பதாகையும் கட்டப்பட்டது. அத்துடன் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்தநாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் -

தலைவர் சம்பந்தன் ஐயா மரணமான அந்த துக்கரமான செய்தி ஞாயிற்றுக்கிழமைஇரவு 11.30 மணியளவில் கிடைத்தது. இந்த செய்தியானது தமிழ் தேசிய பரப்பில்உள்ளஅனைவருக்கும் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள் அனைவருக்கும் துக்கத்தை தந்த செய்தியாகயி ருக்கின்றது. - என்றார்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை அரசியலுக்கு ஓர் இழப்பு; சம்பந்தனுக்கு மஹிந்த இரங்கல்!



மறைந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தனுக்கு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரங்கல் வெளியிட்டுள்ளார்.

மேற்படி இரங்கல் செய்தியை மஹிந்த ராஜபக்ஷ தனது எக்ஸ் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில், 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

அவர் ஒரு பழைய நண்பர் மற்றும் சக ஊழியர், நாங்கள் பல நாள்கள் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

அவரது மறைவு இலங்கை அரசியல் சகோதரத்துவத்திற்கு ஓர் இழப்பு மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் இந்த சோக இழப்பை போக்கட்டும். - எனத் தெரிவித்துள்ளார். (05)

# சம்பந்தன் மறைவுக்கு பொன்சேகா இரங்கல்

இலங்கைத் தமிழ் அரசியல் வரலாற்றில் முக்கிய பங்காற்றிய இரா சம்பந்தன் உடல்நலக் குறைவு காரணமாக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் காலமாகியுள்ளார்.

தமிழரசு கட்சியின் தலைவர் இரா. சம்பந்தனின் மறைவிற்கு இலங்கையின் முன்னாள் இராணுவ தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தியை அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு -

எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர்.சம்பந்தன் மிகவும் மூத்த அரசியல்வாதி. அவரது இழப்பு பெரிதும் உணரப்படும் என சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

(05)

# தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் மறைவுக்கு கிழக்கு ஆளுநர் இரங்கல்

இலங்கைத்தமிழரசுக்கட்சியின் மூத்ததலைவரும், தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனின் மறைவிற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

இந்த இரங்கல் செய்தியை கிழக்கு மாகாண ஆளுநர் தனது முகப்புத்தக பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த பதிவில் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளவை வருமாறு -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் எம்.பி. அவர்களின் மறைவு குறித்து நான் ஆழ்ந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்தேன்.

இலங்கைத்தொழிலாளர்காங்கிரஸின்நீண்டகால நண்பரும், இலங்கையின் எழுச்சியூட்டும் மற்றும் நம்பிக்கைக்குரிய தலைவர் என பதிவிட்டுள்ளார்.

தமிழ்த்தேசிய அரசியலின் மூத்த உறுப்பினரான சம்பந்தன் உடல் நலக் குறைவு காரணமாக தனது 91 ஆவது வயதில் இறைபதம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# தமிழ் மக்களுக்காக குரல்கொடுத்த சம்பந்தன் ஐயாவின் குரல் மௌனித்தது

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. ராஜவரோதயம் சம்பந்தன் அவர்களின் மறைவிற்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

அன்னாரின் மறைவையொட்டி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழுவிபரம் வருமாறு:ஈழத் தமிழ் மக்களின் முதுபெரும் தலைவர் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயக வழிமுறைகளில் இடைவிடாது போராடியவர் தமிழ் மக்கள் இந்த மண்ணில் சகல உரிமைகளையும் பெற்று கௌரவத்துடனும் பாதுகாப்புடனும் வாழவேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டிருந்ததிருகோணமலைபாராளுமன்ற உறுப்பினர் ராஜவரோதயம் சம்பந்தன் தனது 91ஆவது வயதில் காலமாகினார் என்னும் செய்தி தமிழ் மக்களுக்கு கவலை அளிக்கும் செய்தியாகும். நீண்ட நெடிய ஒரு ஜனநாயகப் பாரம்பரியத்தில் வந்து ஆயுதப் போராட்டம் நடந்த காலகட்டத்தில் ஆயுதப் போராட்ட இயக்கங்களுடனும் கலந்துரையாடி ஒன்றிணைந்து செயற்பட்டவர்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் தமக்கென ஓர் ஆட்சிமுறையை உருவாக்கி ஒன்றுபட்ட நாட்டிற்குள் அவர்கள் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழவேண்டும் என்ற உறுதியான கொள்கையுடன் செயற்பட்டது மாத்திரமல்லாமல், ஒவ்வொரு சர்வதேச சமூகத்துடனான சந்திப்புகளிலும் ராஜதந்திர மட்ட சந்திப்புகளிலும் இதனை வலியுறுத்தி வந்தவர். சிங்கள சமூகம் தமிழ் மக்கள்மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்ற காரணத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட்ட பிரிக்கப்பட முடியாத பிரிபடாத நாட்டிற்குள் தமிழ் மக்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தவர். இதற்காக பாராளுமன்றத்திலும் சர்வதேச அரங்குகளிலும் சிங்கள அரசியலவாதிகளுடனும் கலந்துரையாடி குரல்கொடுத்து வந்தவர்.


தந்தை செல்வா, அ.அமிர்தலிங்கம் ஆகியோரின் வழியில் தமிழரசுக்கட்சியின் தலைவராகப் பணிபுரிந்தது மாத்திரமல்லாமல் இலங்கைத் தீவில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் குரல்கொடுத்த பெருந்தலைவர்களில் திரு. சம்பந்தனும் ஒருவர்.

திரு. சம்பந்தன் தொடர்பாக பல்வேறுபட்ட விமர்சனங்கள் பல்வேறு தரப்புகளால் முன்வைக்கப்பட்டாலும் அவர் தனது வரம்பிற்குள் இருந்து தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் போராடியவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழரசுக்கட்சியின் பாரம்பரியத்தின் இறுதி அங்கமாக திரு. சம்பந்தன் அவர்கள் இருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அங்கம் வகித்த காலத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அவருடன் இணைந்து பணியாற்றி காலத்தை நான் நினைத்துப் பார்க்கின்றேன்.

அன்னாருடன் பழகிய தருணங்களை நெஞ்சில் நிறுத்தி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அன்னாரின் மறைவுக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றது. அன்னாரின் குடும்பத்தினர், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், நண்பர்கள் உற்றார் உறவினர் அனைவருக்கும் எமது கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுரேஷ். க. பிமேச்சந்திரன்
தலைவர்
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

# காலஞ்சென்ற சம்பந்தனுக்கு நாமலின் இரங்கல் செய்தி



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவரும், தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் காலமாகியுள்ள நிலையில், அவருக்கு பலரும் இரங்கல் தெரிவித்துவருகின்றனர்.

இந்நிலையில், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தனது இரங்கலை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான ஆர்.சம்பந்தனின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த வருத்தமடைகிறேன்.

அவரது கொள்கைகளுக்கான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஒரு நீடித்த பாரம்பரியத்தை விட்டுச் சென்றது. இக்கட்டான நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்; - என குறிப்பிட்டுள்ளார்.

(05)

# மூத்த அரசியல்வாதி சம்பந்தன் மறைவிற்கு சஜித்தும் இரங்கல்



அரை நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கைக்கு சேவையாற்றிய சம்பந்தனின் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்' என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மூத்த தமிழ் அரசியல்வாதியான சம்பந்தனின் மறைவிற்கு வெளியிட்ட இரங்கல் செய்தியிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

அனைத்து இலங்கையர்களுக்கும் சம உரிமைகளை வழங்குவதற்கான அவரது அர்ப்பணிப்பு நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகும்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.07.2024இல் வெளியிடப்பெற்றது